# கோயம்புத்தூர் மாநகராட்சி

அனுப்புநர்

திரு ஆர். வெங்கடாசலம்,
மேயர்,
கோயம்புத்தூர் மாநகராட்சி,
கோயம்புத்தூர்- 641 001

பெறுநர்

மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்கள்,
வார்டு குழுத்தலைவர்கள், ஆளும்கட்சி
மற்றும் எதிர் கட்சித் தலைவர்கள்,
நியமனக்குழு உறுப்பினர்,
நிலைக்குழு தலைவர்கள் மற்றும்
அனைத்து மாமன்ற உறுப்பினர்கள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.
அனைத்துப் பிரிவுத் தலைமைகள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.
சட்டமன்ற உறுப்பினர்கள்
(கோவை கிழக்கு, மேற்கு,
தொண்டாமுத்தூர், பேரூர் மற்றும்
சிங்காநல்லூர் சட்டமன்ற தொகுதிகள்),
பாராளுமன்ற உறுப்பினர்கள்
(கோவை மற்றும் நீலகிரி
பாராளுமன்றத் தொகுதிகள்)

**ந.க.எண் : 16353 / 2007 / எம்சி. 8 நாள் 21 .9.2007**

அய்யா /அம்மா,

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – மாமன்ற அவசரக் கூட்டம் - செப்டம்பர் 2007-ல் நடைபெறுவது – தொடர்பாக.

-----------

கோயம்புத்தூர் மாநகராட்சியின் மாமன்ற அவசரக் கூட்டம் வருகின்ற **25.9.2007** ஆம் தேதி செவ்வாய் கிழமை மாலை **3.00** மணிக்கு வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் தலைமையில் விக்டோரியா ஹால் மாமன்றக் கூடத்தில் நடைபெற உள்ளது. அது சமயம் அனைத்து மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் அனைத்து தலைமை அலுவலர்களும் மேற்படி கூட்டத்தில் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இக்கூட்டத்திற்கான நிகழ்ச்சி நிரல் இத்துடன் அனுப்பப்படுகிறது.

இணைப்பு : கூட்டக்குறிப்பு

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

/ உண்மைநகல் உத்திரவின்படி/

21.09.07
மன்றச் செயலர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

நகல் :
துணை ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி
ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி

## செப்டம்பர் 2007 மாமன்ற அவசரக் கூட்டத்தின் நிகழ்ச்சி நிரல்

| பொருளடக்கம் | |
|---|---|
| அ) திருக்குறள் வாசித்து மன்ற நிகழ்ச்சியை துவக்குதல்<br>ஆ) தீண்டாமை பழக்கத்தை கைவிட மேற்கொள்ளும் உறுதிமொழி | |
| இ) கேள்வி நேரம் | |
| வ.எண் | ஈ). தீர்மானத்திற்குரிய பொருள் |
| 1. | பொறியியல் பிரிவு-4 அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளுதல்-மாமன்ற ஒப்புதல் கோருதல்-தொடர்பாக. |
| 2. | பொறியியல் பிரிவு- மேற்கு மண்டலம் -வார்டு எண் 62-ராமலிங்கம் நகர்-குழந்தைகள் விளையாட்டுத்திடல் அமைத்தல் பணி-ரூ25 இலட்சம் மதிப்பீடு-நிர்வாக அனுமதி கோருதல்-தொடர்பாக. |
| 3. | பொறியியல் பிரிவு-9 அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளுதல்-மாமன்ற ஒப்புதல் கோருதல்-தொடர்பாக. |
| 4. | நகரமைப்புப் பிரிவு-தெற்கு மண்டலம்-வார்டு எண் 25-ஹைவேஸ் காலனி பகுதி-நகரளவு எண் 1324/35 முதலியன-பலமாடி குடியிருப்பு கட்டிடம் கட்டும் மனையாக அறிவித்தல்-மாமன்ற ஒப்புதல் கோருதல்-தொடர்பாக. |
| 5. | நகரமைப்புப் பிரிவு-உப்பிலிபாளையம் கிராமம்-க.ச.எண் 205/ 3 பாகம்-24.5 சென்ட் இடம்-வணிக உபயோகத்திற்கு நில உபயோக மாற்றம் செய்தல்-மாமன்ற ஒப்புதல் கோருதல்-தொடர்பாக. |
| 6. | நகரமைப்புப் பிரிவு-குமாரபாளையம் கிராமம் -க.ச.எண் 531/ 3 முதலியன-3.78 ஏக்கர் நிலம் - கலப்பு குடியிருப்புப் பகுதியாக நில உபயோக மாற்றம் செய்தல்-மாமன்ற ஒப்புதல் கோருதல்-தொடர்பாக |
| 7. | நகரமைப்புப் பிரிவு-சிங்காநல்லூர் கிராமம் -க.ச.எண் 192/1 முதலியன-18.70-1/2 ஏக்கர் இடம் ; குடியிருப்புப் பகுதியாக நில உபயோக மாற்றம் செய்தல்-மாமன்ற ஒப்புதல் கோருதல்-தொடர்பாக |
| 8. | நகரமைப்புப் பிரிவு-கிழக்கு மண்டலம்-சௌரிபாளையம் கிராமம் - க.ச.எண் 537 முதலியன-13.65 ஏக்கர் நிலம் - வணிக உபயோகப் பகுதியாக மாற்றம் செய்தல்-அடுக்குமாடி கட்டும் பகுதியாக அறிவித்தல்-மாமன்ற ஒப்புதல் கோருதல்-தொடர்பாக |
| 9. | நகரமைப்புப் பிரிவு-சிங்காநல்லூர் கிராமம் -சர்வே எண்கண் 259/ 1 முதலியன-0.20 சென்ட் நிலம் - நெடுஞ்சாலைத்துறைக்கு நில மாற்றம் செய்தல்-ஆட்சேபனையின்மை சான்று வழங்குதல் -மாமன்ற ஒப்புதல் கோருதல்-தொடர்பாக |
| 10. | நகரமைப்புப் பிரிவு-பந்தய சாலை (ரேஸ்கோர்ஸ்) -வணிக வளாகங்கள் மற்றும் அடுக்குமாடி கட்டிடங்கள் கட்டுதல்-தடை விதித்தல்-உள்ளூர் திட்டக்குழுமத்தைக் கோருதல்-மாமன்ற அனுமதி கோருதல்-தொடர்பாக. |
| 11. | வடக்கு மண்டலம்-31 வது வார்டு-கிராஸ்கட் ரோடு காளிங்கராயன் சாலை சந்திப்பு-வாகனங்கள் நிறுத்துமிடமாக அனுமதித்தல்-கட்டணம் நிர்ணயம் செய்தல்-மாமன்ற ஒப்புதல் கோருதல்-தொடர்பாக. |
| 12. | Jnnurm-பில்லூர் 2-ம் குடிநீர் திட்டம்-தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டது-பணி நிறைவேற்றுதல்-மாமன்ற அனுமதி கோருதல்-தொடர்பாக. |
| 13. | பொறியியல் பிரிவு-முறைப்படுத்தப்பட்ட மனைப் பிரிவுகள்-அடிப்படை வசதிகள் அமைத்துக் கொடுத்தல்-கிணற்றுமண் சாலை அமைத்தல்-மாமன்ற அனுமதி கோருதல்-தொடர்பாக. |
| 14. | தெற்கு மண்டலம் -உக்கடம் சுண்டக்காமுத்தூர் புறவழிச்சாலை-இறைச்சிக்கடைகளுடன் கூடிய சந்தை -முன்ஏலம் நடத்துதல்-மாமன்ற அனுமதி கோருதல்-தொடர்பாக. |
| 15. | தெற்கு மண்டலம் -உக்கடம் -பழம் மற்றும் காய்கறிக்கடைகளுடன் கூடிய சந்தை -முன்ஏலம் நடத்துதல்-மாமன்ற அனுமதி கோருதல்-தொடர்பாக. |
| 16. | பொறியியல் பிரிவு-உயர்கல்வி படிப்பகங்கள் ஏற்படுத்துதல்-ரூ25 இலட்சம் மதிப்பீடு-நிர்வாக அனுமதி கோருதல்-தொடர்பாக. |

| | |
|---|---|
| 17. | Jnnurm-திடக்கழிவு மேலாண்மைத் திட்டம்-கம்பர்பிளேசர் வாகனம் வாங்குதல்-ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது-மாமன்ற அனுமதி கோருதல்-தொடர்பாக. |
| 18. | மேற்கு மண்டலம்-மேட்டுப்பாளையம் சாலை மொத்த காய்கறி அங்காடி வளாகம்-ஆர்.சி.சி.கட்டிடம் மற்றும் குடோன் வசதி ஏற்படுத்துதல்-முன்ஏலம் நடத்தி கடைகளை ஒப்படை செய்தல்-மாமன்ற அனுமதி கோருதல்-தொடர்பாக. |
| 19. | பொறியியல் பிரிவு-வணிக வளாகங்களுடன்கூடிய அடுக்குமாடி வாகன நிறுத்துமிடங்கள் அமைத்தல்-விருப்பக் கேட்பு அறிக்கை பெறுதல்-மாமன்ற அனுமதி கோருதல்-தொடர்பாக. |
| 20. | வடக்கு மண்டலம்-சித்தாபுதூர் மேல்நிலைப்பள்ளி-கலையரங்கம் பராமரித்தல் மற்றும் கணிணி பயிற்சி அளித்தல்-முன்னாள் மாணவர் சங்கத்திற்கு அனுமதி அளித்தல்-மாமன்ற ஒப்புதல் கோருதல்-தொடர்பாக |
| 21. | தெற்கு மண்டலம்-வ.உ.சி.பூங்கா, டாக்டர் நஞ்சப்பா ரோடு மைதானம்-5 நபர்களுக்கு பட்டாசு கடை நடத்துவதற்கு அனுமதி அளித்தல்-மாமன்ற அனுமதி கோருதல்-தொடர்பாக. |
| 22. | வடக்கு மண்டலம்-பட்டேல் ரோடு வணிக வளாகம்-உரிமக் கட்டணம் உயர்வு செய்தல்-மாமன்ற ஒப்புதல் கோருதல்-தொடர்பாக. |

நன்றியுரை-

## திருக்குறள்

செய்வானை நாடி வினைநாடிக் காலத்தோ
டெய்த உணர்ந்து செயல்.

(குறள் - 516)

## விளக்கம்

செயலாற்ற வல்லவனைத் தேர்ந்து, செய்யப்பட வேண்டிய செயலையும் ஆராய்ந்து, காலமுணர்ந்து அதனை செயல்படுத்த வேண்டும்.

திருவள்ளுவர்.

---

## ஆ. தீண்டாமை பழக்கத்தை கைவிட மேற்கொள்ளும் உறுதிமொழி

இந்திய அரசியலமைப்பின்பால், இடைவிடாத உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகனாகிய/குடிமகளாகிய நான், நமது அரசியல் அமைப்பின்படி, தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவர்மீதும் சமூக வேற்றுமையை, மனம்,வாக்கு,செயல் என்ற எந்த வகையிலும் கடைபிடிக்க மாட்டேன் என்று இதனால் உளமார உறுதி அளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க, சாதி, சமய வேறுபாடற்ற சமத்துவ சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும், உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும். மேலும், தீண்டத்தகாதவர்கள் என்ற கொடுமைக்கு ஆளாகியுள்ள மக்களிடையே காணப்படும் தீண்டாமை உணர்வையும் போக்குவது நமது சமூகக் கடமை என்பதையும் உணர்ந்து செயல்படுவேன். இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப் பற்றிற்கும் இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்குமென்றும் இதனால் உளமார உறுதியளிக்கிறேன்.

---

| |
|---|
| **இ. கேள்வி நேரம்** |
| **மாமன்ற உறுப்பினர்களது கேள்வி நேரம் பட்டியலிட்டு கொடுக்கப்பட்டுள்ளது.** |
| **மாமன்றத்தில் வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் மாமன்ற உறுப்பினர்களின் பெயரை அழைத்தவுடன் மன்ற உறுப்பினர் எழுந்து மன்றத்தின் பட்டியலில் உள்ள அவரது கேள்வியினை கேட்கலாம்.** |
| **கேள்விக்கு வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் பதிலளிப்பார்கள்.** |

பொருள் எண் : 1

கோவை மாநகராட்சி பகுதிகளில் கீழ்கண்டுள்ள அபிவிருத்திப்பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. இப்பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக் குழு பரிசீலனை செய்து கீழ்க்கண்டவாறு பணிகளை ஏற்க 31-08-2007-அன்று பரிந்துரை செய்துள்ளது.

| வ. எண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்தப்புள்ளி நாள் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப் புள்ளியில் குறிப்பிட்டுள்ள சதவீதம். |
|---|---|---|---|---|---|---|
| 1 | 10029/07/ எம்.டி.4 | வார்டு எண் 28-க்குட்பட்ட காந்திபுரம் நகரப்பேருந்துநிலையத்தில் மத்தியதளம் மற்றும் தெற்கு தளம் முன்புறம் மறுதார்தளம் அமைத்தல் | 23.00 | 24.8.07 முதல் அழைப்பு | தி/ள்..பி. செந்தில் அன் கோ | 0.15 குறைவு |
| 2 | 6329/07/ எம்.டி.4 | வார்டு எண் 40 கோட்டைமேடு நடுநிலைப்பள்ளியில் கூடுதல் வகுப்பறை கட்டுதல், மேற்கூரை மாற்றியமைத்தல் மற்றும் பராமரிப்பு பணி செய்தல் | 9.00 | 24.8.07 முதல் அழைப்பு | திரு.கே.கேவிந்தராஜ் | 4.88 அதிகம் |
| 3 | 11943/07/ எம்.டி.4 | வார்டு எண் 27 அவினாசி ரோடு மாநகராட்சி வணிகவளாகத்தின் மேற்கு பகுதியில் முதல் தளம் கட்டுதல். | 25.00 | 24.8.07 முதல் அழைப்பு | திருமதி. சாந்திசுகா | 4.43 அதிகம் |
| 4 | 2688/07/ எம்.டி.4 | வார்டு எண் 27 அவினாசி ரோடு மாநகராட்சி வணிகவளாகத்தின் வடக்கு பகுதியில் முதல் தளம் கட்டுதல். | 25.00 | 24.8.07 முதல் அழைப்பு | திருமதி. சாந்திசுகா | 4.62 அதிகம் |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புதல் பெற மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது

அலுவலகக் குறிப்பு : வரிசை எண் 1 ல் உள்ள பணியின் மதிப்பீடு மாமன்ற அனுமதி வரம்பிற்குள் வருவதாலும் வரிசை எண் 2 முதல் 4 வரையிலான பணிகள் குறிப்பிட்ட கால கெடுவுக்குள் முடிக்க வேண்டி இருப்பதாலும் , மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் இதை விட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தாலும் இப்பணிகள் அத்தியாவசிய அடிப்படை வசதிகள் உள்ளதாலும் மதிப்பீட்டை காட்டிலும் கூடுதல் சதவீதம் பெறப்பட்ட பணிகளுக்கு பொறியியல் பணி விதிகளின் படி மாமன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளதாலும் , அனுமதிக்கலாம். ந.க.எண். 10029/07/எம்.டி4.

<u>மாநகர மன்ற தீர்மான எண் 137 நாள் 25.09.07</u>

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஓம். ஆர். வெங்கடாசலம்)
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

பொருள் எண். 2

கோவை மாநகராட்சி மேற்கு மண்டலம் வார்டு எண் 62க்குட்பட்ட கே.கே. புதூர் ராமலிங்கம் நகர் மாநகராட்சிக்கு சொந்தமான காலியிடத்தில் சுற்று சுவர் மற்றும் குழந்தைகள் விளையாட்டுதிடல் அமைக்கும் பணி- மேலும் இப்பகுதி மாமன்ற உறுப்பினர் அவர்கள் மேற்கூறிய காலியிடத்தில் சுற்றுசுவர் மற்றும் குழந்தைகள் விளையாட்டுத்திடல் அமைத்து தருமாறு விண்ணப்பித்துள்ளார். எனவே இப்பணிக்கு மதிப்பீடு தொகை ரூ. 25,00,000/- க்கு தயாரிக்கப்பட்டு நிர்வாக அனுமதி பெற வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண். 15576/07/எம்.டி.4

<u>மாநகர மன்ற தீர்மான எண் 138 நாள் 25.09.07</u>

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒம். ஆர். வெங்கடாசலம்)
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

பொருள் எண்: 3

கோவை மாநகராட்சி பகுதிகளில் கீழ்கண்டுள்ள அபிவிருத்திப்பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன இப்பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக் குழு பரிசீலனை செய்து கீழ்க்கண்டவாறு பணிகளை ஏற்க 24-08-2007-அன்று பரிந்துரை செய்துள்ளது.

| வ. எ ண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்தப்புள்ளி நாள் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப் புள்ளியில் குறிப்பிட்டுள்ள சதவீதம். |
|---|---|---|---|---|---|---|
| 1 | 88805/06/ எம்.டி.4 | வார்டு எண் 54-க்குட்பட்ட கோவிந்தசாமி பாதை, பேரூர் ரோடு சந்திப்பிலிருந்து சுண்டக்காமுத்தூர் கல்லாமேடு ரோடு மற்றும் அதன் குறுக்கு சாலைகளுக்கு மறுதார்தளம் அமைத்தல் | 22.40 | 17.7.07 முதல் அழைப்பு | தி/ள். புவனா கன்ஸ்ட்ரக்சன்ஸ் | 0.33 குறைவு |
| 2 | 9893/07/ எம்.டி.4 | வார்டு எண் 42-க்குட்பட்ட உக்கடம் சுண்டக்காமுத்துார் பைபாஸ் ரோட்டில் சிறுபாலம் முதல் பழனியப்பா நகர் வரை மறுதார்தளம் அமைத்தல் | 25.00 | 17.7.07 முதல் அழைப்பு | திரு.எ.வெங்கடாசலம் | 0.37 குறைவு |
| 3 | 9840/07/ எம்.டி.4 | வார்டு எண் 42-க்குட்பட்ட உக்கடம் சுண்டக்காமுத்துார் பைபாஸ் ரோட்டில் கோவர்த்தனா ரோடு சந்திப்பு முதல் சிறுபாலம் வரை மறு தார்தளம் அமைத்தல் | 25.00 | 17.7.07 முதல் அழைப்பு | திரு.ஆர்.கிருஷ்ணசாமி | 0.31 குறைவு |
| 4 | 4078/07/ எம்.டி.4 | வார்டு எண் 61-க்குட்பட்ட கே.கே புதுார் மெயின் ரோட்டில் தடாகம் ரோடு முதல் கணபதி லேஅவுட் வரை மறு தார்தளம் அமைத்தல் | 18.00 | 17.7.07 முதல் அழைப்பு | தி/ள் பி. மல்லையன் பில்டர்ஸ் | 0.17 குறைவு |
| 5 | 8934/04/ எம்.டி.4 | வார்டு எண் 13-க்குட்பட்ட வீரப்பதேவர் காலனியில் மறு தார்தளம் அமைத்தல் மற்றும் எஸ்.எஸ் லேஅவுட்டில் தார்தளம் அமைத்தல். | 10.00 | 12.6.07 மூன்றாம் அழைப்பு | திரு. கே.நடராஜன் | 4.87 அதிகம் |
| 6 | 7161/05/ எம்.டி.4 | வார்டு எண் 61-க்குட்பட்ட வெங்கிட்டாபுரம் நேதாஜி காலனியில் சமுதாயக்கூடம் கட்டுதல் | 6.50 | 13.7.07 ஆறாம் அழைப்பு | தி/ள்.கே.சி.பி. இஞ்சினியர்ஸ் & பேபரிகேட்டர்ஸ் | 4.85 அதிகம் |
| 7 | 4657/05/ எம்.டி.4 | வார்டு எண் 62-ல் உள்ள அண்ணா நகர் குடிசைப்பகுதியில் சமுதாயக்கூடம் மற்றும் மேல்நிலைத் தொட்டி கட்டுதல் | 10.00 | 13.7.07 எட்டாம் அழைப்பு | தி/ள்..என்.பி.கே. அசோசியேட்ஸ் | 4.92 அதிகம் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 8 | 17178/05/ எம்.டி.4 | வார்டு எண் 25-க்குட்பட்ட ஸ்டேட்பேங்க் ரோடு கிழபுறம் பெட்ரோல்பங்க்கு முதல் சாந்தி தியேட்டர் வரை பழுதடைந்த நடைபாதை செப்பனிடுதல். | 9.25 | 17.7.07 மூன்றாம் அழைப்பு | தி/ள். எம்.எஸ் இஞ்சினியர்ஸ் | 4.85 அதிகம் |
| 9 | 9452/07/ எம்.டி.4 | வார்டு எண் 59-க்குட்பட்ட திரு.வி.க.வீதி, சுந்தரம் வீதி மற்றும் திருநாவுக்கரசு வீதிகளில் உள்ள சாக்கடைகளுக்கு மூடுபலகை அமைத்தல் | 1.95 | 13.7.07 இரண்டாம் அழைப்பு | தி/ள்.கே.சி.பி. இஞ்சினியர்ஸ் & பேபரிகேட்டர்ஸ் | 3.69 அதிகம் |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புதல் பெற மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது

அலுவலகக் குறிப்பு : வரிசை எண் 1 முதல் 4 வரையில் உள்ள பணியின் மதிப்பீடு மாமன்ற அனுமதி வரம்பிற்குள் வருவதாலும் வரிசை எண் 5முதல் 9 வரையிலான பணிகள் குறிப்பிட்ட கால கெடுவுக்குள் முடிக்க வேண்டி இருப்பதாலும் , மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் இதை விட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தாலும் இப்பணிகள் அத்தியாவசிய அடிப்படை வசதிகள் உள்ளதாலும் மதிப்பீட்டை காட்டிலும் கூடுதல் சதவீதம் பெறப்பட்ட பணிகளுக்கு பொறியியல் பணி விதிகளின் படி மாமன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளதாலும் , அனுமதிக்கலாம்.

ந.க.எண். 88805/06/எம்.டி4.

<u>மாநகர மன்ற தீர்மான எண் 139 நாள் 25.09.07</u>

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒம். ஆர். வெங்கடாசலம்)
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

பொருள் எண் எண் 4

கோயம்புத்தூர், சரோஜினி வீதி, கதவு எண். 155 - 156 -ல் உள்ள " தி / வா. வித்யபாரதி டெவலப்பர்ஸ் " என்ற நிறுவனத்தினர், கோயம்புத்தூர் மாநகராட்சி, நகரளவு எண். 1324/35, 1325/12 மற்றும் 1325/13 -ல் அமைந்துள்ள மனையினை பலமாடி குடியிருப்பு கட்டிடம் கட்டும் மனையாக அறிவிக்க கோரியும், மேற்படி மனையினை, மனை ஒருங்கிணைப்பு மற்றும் உட்பிரிவு செய்து அதில் 77 குடியிருப்புகள் கொண்ட ஸ்டில்ட், தரை மற்றும் ஐந்து தளங்களுடன் கூடிய பலமாடி பல குடியிருப்பு கட்டிடம் கட்டுவதற்கு அனுமதி கோரியும் நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களுக்கு மாநகராட்சி மூலமாக விண்ணப்பித்துள்ளார்.

மேற்படி இடம், கோயம்புத்தூர் மாநகராட்சி, தெற்கு மண்டலத்திற்கு உட்பட்ட தேர்தல் வார்டு எண். 25-ல் அமைந்துள்ளது. இந்த மனையிடம் கோயம்புத்தூர் விரிவு அபிவிருத்தி திட்டம் எண். 30-லும், முழுமைத் திட்டத்தின்படி குடியிருப்பு உபயோகப்பகுதியிலும் அமைந்துள்ளது. மனையிடத்தின் ஒரு பகுதி நகரளவு எண். 1324/35 அங்கீகரிக்கப்பட்ட சுந்தரேச ஐயர் மனைப்பிரிவில் அமைந்துள்ளது. மற்றொரு பகுதி நகரளவு எண். 1325/12 மற்றும் 1325/13 திருச்சி சாலையின் பின்புறத்தில் ஹைவேஸ் காலனி பகுதியில் அமைந்துள்ளது. உத்தேசக் கட்டிடம் கட்ட அனுமதி கோரும் மனையிடத்தினை ஒட்டி மேற்கு புறத்தில் மாநகராட்சி பராமரிப்பில் உள்ள 40' 0" அகல சாலை அணுகு சாலையாக உள்ளது. உத்தேச கட்டிட வேலை ஆரம்பிக்கப்படவில்லை. ஸ்டில்ட் தளத்தில் வாகனங்கள் நிறுத்துவதற்கு போதுமான இட வசதி செய்யப்பட்டுள்ளது. உத்தேச கட்டிடத்தின் உயரம் 22 மீட்டர் அல்லது 25 மீட்டருக்குள் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

எனவே, கோயம்புத்தூர் மாநகராட்சி, நகரளவு எண். 1324/35, 1325/12 மற்றும் 1325/13-ல் உள்ள 4880.30 சதுரமீட்டர் மனையிடத்தினை பலமாடி மற்றும் பொதுக் கட்டிட விதிகள் 1973 விதி 4(a) -ன்படி, பலமாடி குடியிருப்பு கட்டிடம் கட்டும் பகுதியாக அறிவிப்பு செய்ய நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களுக்கு அனுப்ப மாநகர மன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u> - பலமாடி குடியிருப்பு பகுதியாக அறிவிப்பு செய்யலாம்.

ந.க.எண் 4672/2007/H1(S)

**மாநகர மன்ற தீர்மான எண் 140 நாள் 25.09.07**

பலமாடி குடியிருப்பு பகுதியாக அறிவிப்பு செய்யலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஓம். ஆர். வெங்கடாசலம்)
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 5

விண்ணப்பரார் A.V. தாமஸ் & கோ லிமிடெட் நிறுவனத்தினர் உப்பிலிபாளையம் கிராமம் க.ச.எண். 205/3பாகத்தில் உள்ள 24.5 சென்ட் அல்லது 10672 சதுரடி இடத்தினை குடியிருப்பு பகுதியில் இருந்து வணிக உபயோகத்திற்கு நில உபயோகம் செய்து தரக்கோரி விண்ணப்பித்துள்ளார்.

மேற்படி மனையிடத்தில் பேஸ்மெண்ட் மற்றும் தரை, முதல் இரண்டாம் தளம் வணிக உபயோக அலுவலகம் கட்ட உத்தேசித்துள்ளார் இவ்விடம் சிங்காநல்லூர் விரிவு அபிவிருத்தி திட்டம் எண் . 10-ல் குடியிருப்பு உபயோகத்தில் அமைந்துள்ள இந்நிலத்தை வணிக உபயோகமாக மாற்றம் செய்யக் கோரும் விண்ணப்பத்தாரரின் உத்தேசத்தினை நகரமைப்பு மற்றும் அபிவிருத்திக் குழுவின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்பட்டதில் குழு தனது தீர்மான எண் . 35 நாள் . 20.9.2007 -ல் " பொருளில் குறிப்பிட்ட இடத்தை வணிக நில உபயோகமாக மாற்றக் கோரும் மனுதாரரின் மனுவை மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டது " என்று தீர்மானம் நிறைவேற்றியுள்ளதை மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு- நில உபயோக மாற்றம் செய்யக் கோரும் மனுதாரரின் மனுவை நகர் ஊரமைப்பு ஆணையருக்கு பரிந்துரை செய்யலாம்.

ந.க.எண் 10264/07/எச்1.

**மாநகர மன்ற தீர்மான எண் 141 நாள் 25.09.07**

நகரமைப்பு மற்றும் அபிவிருத்திக்குழுவின் 20.09.2007ம் தேதிய தீர்மானம் எண்.35-ஐ ஏற்று அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஓம். ஆர். வெங்கடாசலம்)
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 6

கோயம்புத்தூர் மாநகரம், குமாரபாளையம் கிராமம் க.ச. எண். 531/3 & 2, 532, 533-ல் அமைந்துள்ள 3.78 ஏக்கர் பரப்புள்ள இடத்தின் நில உபயோகத்தினை, விவசாயப் பகுதியிலிருந்து கலப்பு குடியிருப்புப் பகுதியாக நில உபயோகம் மாற்றம் செய்யக் கோரி மனுதாரர் விண்ணப்பித்துள்ளார்.

உத்தேச நில உபயோக மாற்றம் செய்ய அனுமதி கோரும் மனையிடம் 3.78 ஏக்கர் பரப்பு கொண்டதாக அமைகிறது. இம்மனையிடம் குமாரபாளையம் விரிவு அபிவிருத்தித் திட்ட எண். 7-ன் பகுதியில் அமைகிறது. இத்திட்டத்தின்படி கோயம்புத்தூர் முழுமைத் திட்டத்தின்படியும் இப்பகுதி விவசாயப் பகுதியாக அமைகிறது. இந்த இடத்தின் நில உபயோகத்தினை விவசாயப் பகுதியிலிருந்து கலப்பு குடியிருப்புப் பகுதியாக மாற்றம் செய்துதரக் கோரி மனுதாரர்களான திரு. என். கணேசன் மற்றும் ஆறு நபர்கள் கோரியுள்ளனர். இம்மனையிடத்திற்கு அணுகு பாதையாக நிலையில் உள்ள மாநகராட்சி தார்சாலை அமைகிறது. மேலும் இத்திட்டத்தின்படி இம்மனையிடத்தில் திட்டசாலை ஏதும் புதிதாக உத்தேசிக்கப்படவில்லை மற்றும் இம்மனையிடத்தினை ஒட்டி வாய்க்கால் ஏதும் அமைவதில்லை. மேற்படி இடத்திற்கு வட்டாச்சியரிடமிருந்து தடையின்மை சான்று பெறப்பட்டுள்ளது. மேலும், நகர அளவையர் தமது குறிப்பில் மனுதாரர்கள் சமர்ப்பித்துள்ள பத்திர ஆவணங்களின்படி நில உபயோகம் மாற்றம் கோரும் இடத்தின் பரப்பு 3.78 ஏக்கர் கொண்டதாகவும் சரியாக உள்ளது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

மனுதாரர் சமர்பித்துள்ள நில உபயோகம் மாற்றம் கோரும் விண்ணப்பம் மற்றும் வரைபடங்களுடன் கூடிய ஆவணங்களை மேல் நடவடிக்கைக்காக உள்ளூர் திட்டக் குழுமம் மூலம் நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்கள் வழியாக அரசிற்கு அனுப்ப, நகரமைப்பு மற்றும் அபிவிருத்தி நிலைக் குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டதில் குழு தனது தீர்மான எண் . 36 நாள் . 20.9.2007 -ல் " பொருளில் குறிப்பிட்ட விவசாய நில உபயோகத்தில் உள்ள நிலத்தை

குடியிருப்பு நில உபயோகமாக மாற்றம் செய்யக் கோறும் மனுதாரரின் மனுவை மாமன்றத்திற்கு பரிந்துரை செய்ய தீர்மானிக்கப்பட்டது " என்று தீர்மானம் நிறைவேற்றியுள்ளதை மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு -நில உபயோக மாற்றம் செய்யக் கோறும் மனுதாரரின் மனுவை நகர் ஊரமைப்பு ஆணையருக்கு பரிந்துரை செய்யலாம்.

ந.க.எண்7964/2007/H1.

<u>மாநகர மன்ற தீர்மான எண் 142 நாள் 25.09.07</u>

நகரமைப்பு மற்றும் அபிவிருத்திக்குழுவின் 20.09.2007ம் தேதிய தீர்மானம் எண்.36-ஐ ஏற்று அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஓம். ஆர். வெங்கடாசலம்)
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 7

விண்ணப்பதாரர் N.R. ராமசாமி பவர் ஏஜென்ட் சிங்காநல்லூர் கிராமம், க.ச. எண் . 192/1, 192/3, 192/4, 193, 194, 195/1B, 1C, 1D, 195/2பாகம் மற்றும் 196 -ல் உள்ள 18.70-1/2 ஏக்கர் விவசாய பூமியை குடியிருப்பு நிலஉபயோகமாக மாற்றம் செய்யக் கோரி விண்ணப்பித்துள்ளார்.

மேற்படி மனையிடம் சிங்காநல்லூர் விரிவு அபிவிருத்தி திட்டம் எண். 35ன்படிவிவசாய உபயோகத்தில் உள்ளது. மேற்படி மனையிடத்திற்கு தெற்கு வட்டாச்சியர் ப.மு. 12204/07 ஆ நாள் . 28.6.07-ன் படி சான்று வழங்கப்பட்டுள்ளது. அதில் க.ச. எண். 192/2 குட்டை மற்றும் 192/5 இட்டேரி புறம் போக்கில் ஆக்கிரமிப்பு செய்யக் கூடாது எனவும் குறிப்பிட்டுள்ளார். இருகூர் டவுன் பஞ்சாயத்து செயல் அலுவலர் தனது 20.9.2007 -ம் நாளைய சான்றில் பிரஸ்தாப இடத்திற்குரிய அணுகு சாலைப் பற்றி சான்று வழங்கியுள்ளார்.

18.70-1/2 ஏக்கர் இடத்தை நில உபயோக மாற்றம் செய்யக் கோறும் இப்பொருள் நகரமைப்பு மற்றும் அபிவிருத்தி நிலைக்குழுவிற்கு வைக்கப்பட்டதில் குழு தனது தீர்மான எண். 37 நாள் . 20.9.2007 " செயல் அலுவலர் இருகூர் பேரூராட்சி அவர்களின் 20.9.2007 -ம் தேதிய சான்றின் படி இந்நிலத்திற்கு அணுகு சாலை உள்ளதால் பொருளில் குறிப்பிட்ட விவசாய நில உபயோகத்தில் உள்ள நிலத்தை குடியிருப்பு நில உபயோக மாற்றம் செய்யக் கோறும் மனுதாரரின் மனுவை மாமன்றத்திற்கு பரிந்துரை செய்ய தீர்மானிக்கப்பட்டது " என்று தீர்மானம் நிறைவேற்றியுள்ளதை மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-நில உபயோக மாற்றம் செய்யக் கோறும் மனுதாரரின் மனுவை நகர் ஊரமைப்பு ஆணையருக்கு பரிந்துரை செய்யலாம்.

ந.க.எண் 10030/07/எச்1.

<u>மாநகர மன்ற தீர்மான எண் 143 நாள் 25.09.07</u>

நகரமைப்பு மற்றும் அபிவிருத்திக்குழுவின் 20.09.2007ம் தேதிய தீர்மானம் எண்.37-ஐ ஏற்று அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஓம். ஆர். வெங்கடாசலம்)
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

பொருள் எண் 8

மேலாண்மை இயக்குநா், ETL இன்ப்ராஸ் ஸ்ராக்சா் சா்வீஸ் லிமிடெட், சென்னை என்பவா், கோயம்புத்தூா் மாநகராட்சி, சௌரிபாளையம் கிராமம், க.ச. எண். 537 பாகம், 538, 539/3, 542/2, 543 மற்றும் 544 பாகம்-ல் உள்ள 13.65 ஏக்கா் நிலத்தினை குடியிருப்பு உபயோகத்தில் இருந்தும் மற்றும் தொழிற்சாலை உபயோகத்தில் இருந்தும் வணிக உபயோக பகுதியாக மாற்றம் செய்யவும், மற்றும் அடுக்குமாடி கட்டிடம் கட்டும் பகுதியாக அறிவிக்கவும் வேண்டி கோயம்புத்தூா் உள்ளூா் திட்ட குழுமத்திற்கு மாநகராட்சி மூலம் 21.8.2007- ல் விண்ணப்பிக்கப்பட்டுள்ளது.

மேற்படி இடம் சௌரிபாளையம் நவஇந்தியா சாலையில் வாா்டு எண். 14-ல் அமைகிறது. உத்தேச மனையிடம் சிங்காநல்லூா் விரிவு அபிவிருத்தி திட்டம் எண். 20 -லும், முழுமைத் திட்டத்தின்படி சௌரிபாளையம் கிராமம் க.ச.எண் . 537 பாகம், 542/2, 543, 544 பாகம் ஆகியவை குடியிருப்பு உபயோகப் பகுதியிலும் க.ச. எண். 538, 539/3 ஆகியவை தொழிற்சாலை உபயோகப் பகுதியிலும் அமைந்துள்ளது. மனையிடத்திற்கு 20 அடி அகல சாலை அணுகு இந்நிலத்திற்கு 60 அடி அகல திட்ட சாலையில் 20 அடி அகல புழக்கச்சாலை அணுகு சாலையாக உள்ளது. திட்ட சாலை விஸ்தரிப்பு பகுதியை மனுதாரா் / இட உரிமையாளா் மனைக்கு இறுதி ஒப்புதல் பெறு முன்னா் மாநகராட்சிக்கு தானமாக ஒப்படை செய்யவேண்டும்.

மனுதாரா் மனையிடத்தில் கட்டிட வேலை நடைபெற்று கொண்டுள்ளது. அனுமதியின்றி கட்டிட பணி துவக்கப்பட்டுள்ளதால் மாநகராட்சி மூலம் 296(1,2) அறிவிப்பு கொடுக்கப்பட்டு தொடா் நடவடிக்கை எடுத்து கட்டிடப்பணி தற்சமயம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. மேலும் நீதிமன்றம் மூலம் குற்றச்சாட்டு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேற்படி மனையிடத்திற்கு வட்டாச்சியிடமிருந்து தடையின்மை சான்று பெறப்பட்டுள்ளது. தொழில் நுட்ப பூங்கா கட்டிடம் என்பதால் "எல்காட்" நிறுவனத்தின் தடையின்மை சான்றும் பெறப்பட்டுள்ளது. மேலும் EIA கிளியரன்ஸ், தீயணைப்பு துறை சான்றிதழ், மற்றும் ஏா்போா்ட் அத்தாரிட்டியிடம் இருந்து ஆட்சேபணையின்மை சான்று கோரி விண்ணப்பித்துள்ளதாகவும், இன்னும் அத்துறைகளிடம் இருந்து சான்று வரவில்லை என்றும் மனுதாரரால் தெரிவிக்கப்பட்டது. மேற்படி சான்றுகளை இறுதி ஒப்புதல் பெறு முன்னா் மனுதாரா் பெற்று சமா்ப்பிக்கவேண்டும்.

மனுதாரா் தெரிவித்துள்ள சம்மதக் கடிதத்தின்படி பாதாள சாக்கடை இணைப்புக்கு மாநகராட்சி நிா்ணயிக்கும் மதிப்பீட்டுத் தொகை மற்றும் வைப்புத் தொகையினை மாநகராட்சிக்கு செலுத்த வேண்டும்.

நகரமைப்பு மற்றும் அபிவிருத்தி நிலைக்குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டதில் குழு தனது தீா்மான எண். 38 நாள். 20.9.2007 -ல் " குடியிருப்பு மற்றும் தொழிற்சாலை நில உபயோகங்களில் உள்ள பொருளில் குறிப்பிட்ட நிலத்தை வணிக நில உபயோகமாக மாற்றக் கோறும் மனுதாரரின் மனுவை மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீா்மானிக்கப்பட்டது " என்று தீா்மானம் நிறைவேற்றியுள்ளது.

எனவே, சௌரிபாளையம் கிராமம், க.ச. எண் . 537பாகம், 542/2, 543, 544பாகம் ஆகிய காலைகளை குடியிருப்பு உபயோகத்தில் இருந்தும், க.ச. எண். 538, 539/3 ஆகிய காலைகள் தொழிற்சாலை உபயோகத்தில் இருந்தும் வணிக உபயோகப்பகுதியாக நில உபயோக மாற்றம் செய்யவும், மேற்படி மனையிடத்தினை அடுக்குமாடி கட்டிடம் கட்டும் பகுதியாக அறிவிப்பு செய்யவும் அனுமதி கோரும் இப்பொருள் மாமன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு- மேற்படி நில உபயோகமாற்றம் செய்யவும், மேற்படி நிலங்களை
அடுக்குமாடி கட்டும் பகுதியாக அறிவிப்பு செய்யவும் நகா் ஊரமைப்பு
ஆணையருக்கு பரிந்துரை செய்யலாம்.

ந.க.எண் 11263/2006/H1(கி).

<u>மாநகர மன்ற தீா்மான எண் 144 நாள் 25.09.07</u>

நகரமைப்பு மற்றும் அபிவிருத்திக்குழுவின் 20.09.2007ம் தேதிய தீா்மானம் எண்.38-ஐ ஏற்று அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீா்மானிக்கப்பட்டது.

(ஒம். ஆா். வெங்கடாசலம்)
மேயா்
கோயம்புத்தூா் மாநகராட்சி

---

## பொருள் எண் 9

கோயம்புத்தூர், மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள் தமது நேர்முக கடித எண். 48218/2002/ஆ7. நாள் . 31.8.2007 -ல் கோயம்புத்தூர் மாநகராட்சி, கிழக்கு மண்டல பகுதியில் ரயில்வே மேம்பாலம் கட்டி பொதுமக்கள் உபயோகத்திற்காக சிங்காநல்லூர் கிராமம் சர்வே எண்கள் முறையே 259/1, 777 மற்றும் 778 ஆகிய புலங்களில் 0.20 சென்ட் நிலம் நெடுஞ்சாலைத் துறைக்கு நில மாற்றம் செய்து உத்தரவுகள் பிறப்பிக்க ஏதுவாக மாநகராட்சியின் இசைவினை மன்ற தீர்மான வடிவில் அனுப்புமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி சர்வே எண்கள் குறித்த வரைபடம் மற்றும் அடங்கல் நகல்கள் நகரசார் ஆய்வர் (கிழக்கு) அவர்கள் 19.9.2007 -ம் தேதிய குறிப்பில் சமர்ப்பித்துள்ளார்.

எனவே, சிங்காநல்லூர் கிராமம், க.ச. எண். முறையே 259/1, 777 மற்றும் 778 ஆகிய புலங்களில் 0.20 சென்ட் நிலம் நெடுஞ்சாலைத் துறைக்கு நில மாற்றம் செய்ய மாநகராட்சிக்கு ஆட்சேபனையில்லை என்பதை மாவட்ட வருவாய் அலுவலர்க்கு தெரிவிக்க மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : ஒப்புதல் செய்யலாம். ந.கஎண். 16215/2007/MH5.

**மாநகர மன்ற தீர்மான எண் 145 நாள் 25.09.07**

அலுவலகக் குறிப்பு ஒப்புதல் செய்யலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒம். ஆர். வெங்கடாசலம்)
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 10

கோயம்புததுார் மாநகரில் உள்ள ரேஸ் கோர்ஸ் என்கிற பந்தையச் சாலை கோயம்புத்துார் மாநகரின் முக்கிய பகுதியாக உள்ளது. மேற்படி பகுதியில் பாதுகாக்கப்பட வேண்டிய பல பகுதிகள் உள்ளது. சுற்றுப்புற சூழலை பாதுகாக்கும் வகையில் மேற்படி பகுதியை மாநகராட்சியால் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது. மேற்படி பகுதிக்கென்று இயற்கையோடு ஒன்றிய ஒரு தனித்துவம் உள்ளது.

சமீபகாலமாக மேற்படி பகுதியின் தனித்துவத்தை மாற்றும் வகையில் வணிக வளாகங்கள், அடுக்குமாடிக் கட்டிடங்கள், போக்குவரத்து நெரிசல்கள் போன்ற நகர்ப்புற பிரச்சனைகள் ஏற்படத் துவங்கியுள்ளன. இதனை கட்டுப்படுத்தாவிடில் பிற்காலத்தில் இப்பகுதி வணிக வளாகப் பகுதியாக மாறி சுற்றுப்புற சூழல் மாசுபடும் நிலை ஏற்பட.வாய்ப்பு உள்ளது. எனவே மேற்படி பகுதியில் பந்தைய சாலையிலிருந்து 200 மீட்டர் துூரத்திற்குள் இனிமேல் வணிக வளாகங்கள், அடுக்குமாடி கட்டிடங்கள் வருவதை தடை செய்யவும் இதற்குரிய தொடர் நடவடிக்கையினை கோயம்புததுார் மாநகராட்சி சட்டம், 1981 பிரிவு 269 -இன் கீழ் மாமன்ற ஒப்புதலுடன் தடை அறிவிப்பினை வெளியிடலாம். இதுபோன்று நடவடிக்கைகளை நகர் ஊரமைப்பு சட்டம், 1971 -இன் கீழ் எடுக்குமாறு கோயம்புததுார் உள்ளுர் திட்டக் குழுமத்தை கோரலாம்.

அலுவலகக் குறிப்பு; அங்கீகரிக்கலாம். ந.க.எண் **16221/07/MH5**

**மாநகர மன்ற தீர்மான எண் 146 நாள் 25.09.07**

பந்தய சாலையின் மத்தியிலிருந்து வெளிப்புறமாக 200 மீட்டர் துாரம் வரையிலும், பந்தய சாலையின் உட்புறம் முழுவதிலும் உள்ள இடத்திலும் அரசு ஆணை எண் 1730, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி நிர்வாகத்துறை நாள் 24.07.1974-ல் வரையறை செய்துள்ளதாறு, வணிக உபயோக பகுதியாக உபயோகிப்பதையும், 1973-ம் வருடத்திய பலஅடுக்குமாடி மற்றும் பொது உபயோக கட்டிட விதிகளின்கீழ் வரையறை செய்யப்பட்டுள்ள பலஅ டுக்குமாடி கட்டிடங்கள் ஏற்படுத்துவதையும் தடை செய்ய தீர்மானிக்கப்பட்டது.

(ஒம். ஆர். வெங்கடாசலம்)
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 11

பொருள்-வாகன நிறுத்தும் இடம் -கோவை மாநகராட்சி – வடக்கு மண்டலம் 31வது வார்டில் கிராஸ்கட் சாலை காளிங்கராயன் சாலை சந்திப்பில் மாநகராட்சிக்கு சொந்தமான காலியிடத்தில் வாகனங்கள் நிறுத்தும் இடமாக பயன்படுத்துவதற்கு அனுமதி வேண்டுதல்.

---------------

கோவை மாநகராட்சி வடக்கு மண்டலத்திற்குட்பட்ட கிராஸ் கட் சாலை மற்றும் சுற்றுப்பகுதிகள் நெரிசல் மிகுந்த சாலைகளாகவும், வியாபார நிறுவனங்கள் நிறைந்த பகுதியாகவும் உள்ளதால் பொதுமக்கள் அதிகமாக வந்து செல்கின்றனர். மாலை நேரங்களில் பெருகிவரும் வாகனங்களால் ஏற்படும் நெருக்கடிகளால், போக்கு வரத்திற்கு மிகுந்த சிரமம் ஏற்படுகிறது.

தற்போது பெருகிவரும் வாகன நெருக்கடியால் ஏற்படும் போக்குவரத்து நெருக்கடியை தவிர்க்க தற்காலிக வாகன நிறுத்துமிடம் பொதுமக்களுக்கு மிகுந்த அவசியமாகிறது.

கோயம்புத்தூர் மாநகராட்சி வார்டு 31 கிராஸ்கட் சாலை காளிங்கராயன் சாலையில் மாநகராட்சிக்கு சொந்தமான காலியிடத்தில் இரண்டு சக்கரம் மற்றும் நான்கு சக்கர வாகனங்களை நிறுத்தலாம்.

மேற்கண்ட இடத்தில் வாகனங்களை நிறுத்துவதற்கு கீழ்கண்டவாறு கட்டணங்கள் நிர்ணயித்து வசூல் செய்யலாம்.

| | | |
|---|---|---|
| நான்கு சக்கர மோட்டார் வாகனங்கள் - | ரூ 20.00 | (ஒரு நான்கு மணி நேரத்திற்கு மட்டும்) |
| இரண்டு சக்கர மோட்டார் வாகனங்கள்- | ரூ 10.00 | (ஒரு நான்கு மணி நேரத்திற்கு மட்டும்) |
| சைக்கிள்கள் - | ரூ 5.00 | (ஒரு நான்கு மணி நேரத்திற்கு மட்டும்) |

நிறுத்தப்படும் வாகனங்களுக்கு வசூலிக்கப்படும் கட்டணங்கள் முதல் நான்கு மணி நேரத்திற்கும் அடுத்து தொடர்ந்து வாகனங்கள் நிறுத்தப்பட்டால் நான்கு மணி நேரத்திற்கு வசூலிக்கப்படும் கட்டணத்தை மடங்காக வசூலிக்கலாம்.

<u>சிறப்பு நிபந்தனைகள்</u>

1. பெருகிவரும் வாகன நெருக்கடியை கருத்தில் கொண்டு வாகனநிறுத்தும் இடத்தில் ஒரு வாகனம் தொடர்ந்து 24 மணி நேரத்திற்கு நிறுத்த அனுமதிகிடையாது
2. பழைய பழுதான வாகனங்கள் பயன்படுத்த இயலாத வாகனங்கள் ஆகியவற்றை வாகன நிறுத்தும் இடத்தில் விட்டு செல்லவோ அல்லது நிறுத்தவோ அனுமதி கிடையாது.

இத்துடன் ஏற்கனவே உள்ள மாநகராட்சி வாகன நிறுத்தத்திற்கான 2007-2008 குத்தகை நிபந்தனைகளும் பொருந்தும் வகையில் பகிரங்க ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரி ஒப்படை செய்யவும் அதற்கான விளம்பரத் தொகையினை ஏற்கவும் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் முன்ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - ஒப்புதல் அளிக்கலாம் ந.க.எண்-11676/2007/A4(வ)

<u>மாநகர மன்ற தீர்மான எண் 147 நாள் 25.09.07</u>

வாகனம் நிறுத்தும் கட்டணமாக ஒவ்வொரு ஆறுமணி நேரத்திற்கும் நான்கு சக்கர மோட்டார் வாகனங்களுக்கு ரூ. 20.00 எனவும்,இரண்டு சக்கர வாகனங்களுக்கு ரூ. 10.00 எனவும், சைக்கிள்களுக்கு ரூ. 5.00 எனவும் நிர்ணயம் செய்து வசூலிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஓம். ஆர். வெங்கடாசலம்)
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் :12

கோவை மாநகரின் வருங்கால குடிநீர்த் தேவையை கருத்தில் கொண்டு பில்லூர் அணையிலிருந்து கூடுதல் குடிநீர் பெறும் வகையில் பில்லூர் இரண்டாவது குடிநீர்த் திட்டத்தினை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் செயல்படுத்த உரிய மதிப்பீடு தயாரித்து வழங்கிட கேட்டு கோவை மாநகராட்சி மாமன்றம் தனது தீர்மான எண் 390, நாள் 28-02-2002-ல் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்புத் திட்டத்தின் கீழ் கோயம்புத்தூர் மாநகராட்சியால் செயல்படுத்தப்பட உள்ள பில்லூர் இரண்டாம் குடிநீர் திட்டத்திற்கு ரூ. 113.74 கோடி மதிப்பில் தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு மத்திய நகர்புற வளர்ச்சி துறையின் “ ஒப்புதல் வழங்கும் மற்றும் கண்காணிப்பு குழு ” 28-12-2006-ல் ஒப்புதல் வழங்கியுள்ளது. மேலும் இத்திட்டத்திற்கு அரசாணை எண் (டி) 160 குடிநீர் மற்றும் வழங்குதுறை நாள் 17-04-2004-ல் அரசு நிர்வாக அனுமதி வழங்கியுள்ளது.

இத் திட்டப் பணிக்கான மதிப்பீடுகள் ஆறு தொகுப்புகளாக பிரிக்கப்பட்டு கீழ்கண்ட ஐந்து தொகுப்புகளுக்கு தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

| வ. எண் | பணியின் விபரம் | மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 1) | பேக்கேஜ் - II – பெரிய கோம்பை மலைப் பகுதி குகை வெளியேற்றத்திலிருந்து வெள்ளியங்காடு நீர் சுத்திகரிப்பு நிலையம் வரை 1500 மி.மீ. விட்டம் உள்ள PSC குழாய் பதிக்கும் பணி. | 167.00 |
| 2) | பேக்கேஜ் - III – வெள்ளியங்காடு பகுதியில் 125 எம்.எல்.டி. கொள்ளளவு கொண்ட புதிய நீர் சுத்திகரிப்பு நிலையத்தினை வடிவமைத்து , நிர்மானம் மற்றும் இயக்கி பராமரிப்பு செய்து தரும் பணி. | 2860.00 |
| 3) | பேக்கேஜ் - IV – வெள்ளியங்காடு நீர் சுத்திகரிப்பு நிலையததிலிருந்து கட்டன் மலை குகை நுழைவு வரை 1100 மி.மீ. விட்டமுள்ள M.S குழாய் பதிக்கும் பணி. | 1993.00 |
| 4) | பேக்கேஜ் - V – கட்டன் மலை குகை வெளியேற்று பகுதியிலிருந்து ராமகிருஷ்ணாபுரம் மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி வரை 1000 – 1500 மி.மீ. விட்டமுள்ள குழாய் பதிக்கும் பணி. | 4580.50 |
| 5) | பேக்கேஜ் - VI – ராமகிருஷ்ணாபுரம் பகுதியில் 30 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலைத் தொட்டி கட்டும் பணி. | 304.60 |
| | மொத்தம் | 9905.1 |

மதிப்பீட்டு தொகுப்பு II முதல் VI வரையிலான பணிகளுக்கு 24-10-2007 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட உள்ளன.

மதிப்பீட்டு தொகுப்பு I திட்டத்திற்கென தனியாக ஒரு நீர் சேகரிப்பு கிணறு அமைத்து குகை அமைப்பு மூலம் ( tunnel ) நீர் கொணருமாறு மதிப்பீடுகள் தயாரித்து வழங்கும்படி தமிழ்நாடு மின்சார வாரியத்திடம் கோரப்பட்டது.

தமிழ்நாடு மின்சார வாரியத்தால் கீழ்கண்ட விபரப்படி மேற்படி பணிக்காக மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு 07-09-2007-ல் சமர்ப்பிக்கப்பட்டது இதன் விபரம் பின்வருமாறு :

| வ. எண் | பணியின் விபரம் | மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 1. | கட்டுமானப் பணிகள் ( Civil Works ) | 1157.00 |
| 2. | மின் மோட்டார்கள் மற்றும் பம்பு செட்டுகள் நிறுவுதல் | 900.00 |
| 3. | பணியாளர்கள் செலவுகள் ( Establishment charges ) | 603.00 |
| | மொத்தம் | 2660.00 |

இப்பணிகள் அதிகபட்சம் ஒன்பது மாதத்தில் முடிக்க இயலும் எனவும் தற்போது தூர் வாருதல் செய்ய தமிழ்நாடு மின்சார வாரியம் உத்தேசித்துள்ளதாலும் Tunnel அமைப்பு பணி உடன் துவங்குவது நன்மை பயக்கும் என தெரிகிறது.

மேற்படி மதிப்பீடு கண்காணிப்பு பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை, கண்காணிப்பு பொறியாளர்கள் , தமிழ்நாடு மின்சார வாரியம் , மாநகராட்சி ஆணையர் மற்றும் மாநகராட்சி பொறியாளர்களால் 19-09-2007- அன்று நடைபெற்ற ஆலோசனை கூட்டத்தில் கூராய்வு செய்யப்பட்டதை தொடர்ந்து மேற்படி மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்டிருந்த மின் மோட்டார்களின் எண்ணிக்கை மாநகராட்சியின் தேவைக்கேற்ப குறைக்கப்பட்டும், இந்த பணி மாநகராட்சியின் ஒப்படைப்பு பணியாக (Deposit work) நிறைவேற்ற உத்தேசிக்கப்பட்டுள்ளதால் பணி நடைபெறும் காலத்தில் திட்ட செலவிற்கான

வட்டித் தொகையை முற்றிலும் நீக்கும் பொருட்டு கீழ்கண்ட மூன்று பகுதிகளாக பிரிக்கப்பட்டு திருத்திய மதிப்பீடுகள் தமிழ்நாடு மின்சார வாரியத்தால் கீழ்கண்டவாறு சமா்ப்பிக்கப்பட்டுள்ளன.

| வ.எண் | மதிப்பீட்டு தொகுப்புகளின் விபரம் | மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 1. | கட்டுமானப் பணிகள் ( Civil Works ) | 1207.00 |
| 2. | மின் மோட்டார்கள் மற்றும் பம்பு செட்டுகள் நிறுவுதல் | 450.00 |
| 3. | பணியாளர்கள் செலவுகள் (Establishment charges ) | 173.00 |
| | மொத்தம் | 1830.00 |

மேற்கண்ட பட்டியலில் உள்ள பணிகளில் வரிசை எண் 1-ல் குறிப்பிடப்பட்டுள்ள கட்டுமானப் பணிகளுக்கான ( Civil works ) மதிப்பீட்டு தொகையினை மதிப்பீட்டை ( ரூ. 1207 இலட்சம்) பில்லூர் குடிநீர் திட்டத்தின் கீழ் ஒதுக்கீட்ட தொகையில் இருந்து ( ரூ. 11374.00 இலட்சம் ) மேற்கொள்ளவும், மேற்படி பணியினை தமிழ்நாடு மின்சார வாரியத்திடம் ஒப்படைப்பு பணியாக (Deposit work) ஒப்படைத்து பணியை நிறைவேற்றவும், வரிசை எண் 2-ல் குறிப்பிடப்பட்டுள்ள மின் மோட்டார்கள் மற்றும் பம்பு செட் நிறுவும் பணியை ( ரூ. 450.00 இலட்சம் மதிப்பீட்டு தொகையில் ) மாநகராட்சி நிதியிலிருந்து மேற்கொள்ளவும், மேற்கண்ட பணிகள் அனைத்தும் பொதுமக்களுக்கான அத்தியாவசியமான குடிநீர்பணிகளாக உள்ளதினால் வரிசை எண் 3-ல் குறிப்பிடப்பட்டுள்ள பணியாளர் செலவுகளுக்கான தொகையினை இம்மாநகராட்சி செலுத்துவதிலிருந்து சிறப்பினமாக கருதி விலக்கு அளிக்கும்படி தமிழ்நாடு மின்சார வாரியத்தின் தலைவா் அவா்களை கேட்டுக் கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதி கோரி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு -

1) பட்டியலில் உள்ள வரிசை எண் 1 –ல் குறிப்பிடப்பட்டுள்ள கட்டுமானப் பணிகளை மேற்கொள்ளும் பணியினை, Tunnel அமைக்கும் பணியில் தனித் திறன் பெற்றிருப்பதால் தமிழ்நாடு மின்சார வாரியத்திடம் ஒப்படைப்பு பணியாக ( Deposit work ) ஒப்படைப்பு செய்து பணியை மேற்கொள்ளவும் ஒப்புதல் வழங்கலாம்.

2) மேற்கண்ட பட்டியலில் கண்டுள்ள விபரப்படி ரூ. 450 இலட்சம் மதிப்பில் மின் மோட்டார்கள் மற்றும் பம்பு செட்டுகள் நிறுவும் பணியை அரசின் மானியத்திலிருந்தோ அல்லது மாநகராட்சி நிதியிலிருந்து இப்பணியை தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மூலமே நிறைவேற்றிட ஒப்புதல் வழங்கலாம்.

3) பட்டியலில் வரிசை எண் 3-ல் குறிப்பிடப்பட்டுள்ள விபரப்படி பணியாளர் செலவுகளுக்கான தொகையை செலுத்துவதிலிருந்து சிறப்பினமாக கருதி விலக்கு அளிக்கும்படி தமிழ்நாடு மின்சார வாரியத்தின் தலைவா் அவா்களை கேட்டுக் கொள்ள உரிய பிரேரணை அனுப்பிட அனுமதி வழங்கலாம்.

ந.க.எண் 9190/2002/ எம்.டி.மேன்.

<u>மாநகர மன்ற தீா்மான எண் 148 நாள் 25.09.07</u>

அலுவலகக் குறிப்பில் குறிப்பிட்டுள்ள அனைத்து பணிகளையும் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு ஒப்படைப்புப் பணியாக மதிப்பீட்டு தொகை முழுவதையும் ஒப்படைத்து பணிகளை நிறைவேற்ற தீா்மானிக்கப்பட்டது. மேலும் மின் மோட்டார்கள் மற்றும் பம்பு செட்டுகள் நிறுவும் பணியினை மேற்கொள்ள உண்டாகும் செலவினம் ரூ.450.00 இலட்சத்திற்கு 2007-08 ம் ஆண்டின் திருத்திய வரவு-செலவி திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்து மாநகராட்சி நிதியிலிருந்து மேற்கொள்ளவும் தீா்மானிக்கப்பட்டது.

(ஓம். ஆர். வெங்கடாசலம்)
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

பொருள் எண் :13

கோவை மாநகராட்சி பகுதிகளில் உள்ள அனுமதியற்ற மனைப்பிரிவுகளை முறைப்படுத்தி அபிவிருத்திப்பணிகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை அரசாணை எண் 59 நாள் 25-07-2006 ல் வெளியிடப்பட்டுள்ளது. மேற்படி இம்மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் புதிதாக முறைப்படுத்தப்பட்ட மனைப்பிரிவுகளில் அடிப்படை வசதிகளான குடிநீர் குழாய் பதிக்கவும் தெருவிளக்கு அமைக்கவும் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு அனுமதி பெறப்பட்டு பணிகள் முடிவுறும் நிலையில் உள்ளது. அதனைத் தொடர்ந்து அடுத்தகட்டமாக மேற்படி மனைப்பிரிவுகளில் உள்ள சாலைகள் மண் சாலையாகவும் புதிதாக குடிநீர் குழாய் பதிக்கப்பட்ட பகுதிகளை சரி செய்யவும், மழைக்காலங்களில் சாலைகளில் நீர் தேங்கி வாகன போக்குவரத்திற்கும் பொதுமக்களுக்கும் இடையூறாக உள்ளது. மேலும், மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மத்திய அரசின் ஜவஹர்லால் நேரு தேசிய புனரமைப்புத் திட்டத்தின் கீழ் பாதாள சாக்கடை குழாய் பதிக்கும் திட்டம் மற்றும் பில்லூர் இரண்டாவது தனி குடிநீர் திட்டம் மற்றும் அனைத்து பகுதிகளிலும் பகிர்மானக் குழாய் அமைக்கும் திட்டமும் குறுகிய காலகெடுவுக்குள் நிறைவேற்றப்படவுள்ளதால் மேற்படி மனைப்பிரிவு சாலைகளுக்கு குறைந்த பட்சம் கிணற்றுமண் சாலையாவது அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மேலும் கடந்த 10-08-2007 அன்று நடைபெற்ற பணிக்குழு கூட்டத்தில் பணிக்குழு தலைவர் மற்றும் பணிக்குழு உறுப்பினர்கள் வேண்டுகோளின்படியும் மற்றும் 30-08-2007 அன்று வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் தலைமையில் ஆணையாளர், உதவி ஆணையாளர், மாநகரப் பொறியாளர், நிர்வாகப் பொறியாளர் மற்றும் உதவி நிர்வாகப் பொறியளர்களின் முன்னிலையில் நடைபெற்ற கலந்தாய்வு கூட்டத்திலும் மேற்படி மனைப்பிரிவுகளில் கிணற்று மண் சாலை அமைக்க மதிப்பீடுகள் தயாரித்து நடவடிக்கை மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டது.

அதன்படி மேற்படி மனைப்பிரிவுகளில் கிணற்று மண் சாலை அமைக்க மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு அனுமதிக்காக வைக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே புதிய மனைபிரிவுகளில் தார்சாலை அமைக்க ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 5 கோடியில் ரூ. 2.58 கோடியை புதிதாக வரன்முறைபடுத்தப்பட்ட மனைப்பிரிவுகளில் கிணற்று மண் சாலைகள் அமைக்க மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு - அனுமதிக்கலாம். ந.க.எண் : 12139/2007/எம்.டி.4

<u>மாநகர மன்ற தீர்மான எண் 149 நாள் 25.09.07</u>

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒம். ஆர். வெங்கடாசலம்)
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

பொருள் எண். 14

கோயம்புத்துர் மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட உக்கடம் சுண்டக்காமுத்தார் புறவழிச்சாலை டி.எஸ்.வார்டு எண்.3, பிளாக் நெம்பர் 25, டி.எஸ்.எண்.1905 பகுதியில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள கட்டமைப்பு வசதியுடன் கூடிய மீன், மட்டன் மற்றும் சிக்கன் இறைச்சிக் கடைகளுடன் கூடிய சந்தை ரூ137.00 லட்சங்களில் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

<u>கட்டமைப்பு விவரங்கள்</u>

| | |
|---|---|
| கடைகளின் எண்ணிக்கை மற்றும் அளவு | 73 எண்ணிக்கை (அளவு 10'0x10'0) |
| கழிப்பிடம் | 1 (அளவு 15'0" x 15'0" = 225 சதுரடி) |
| வாகன நிறுத்துமிடம் | 2 எண்ணிக்கை<br>(i) 1 அளவு138'3' x 12'6' =1728.13 சதுரடி<br>(ii) அளவு 166'0" x 11'6"=1909.00 சதுரடி |

மாநகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களது சுற்றறிக்கையில் மாநகராட்சியில் இது போன்று கட்டப்படவுள்ள கடைகள் மற்றும் மார்க்கெட்டுகள் கட்டி முடிக்கப்பட்டு பின்னர் ஏலம் விடப்படுவதால் கடைகள் ஒப்படைக்கும் காலம் வரையில் வருவாய் இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. இதனால் கடைகள் கட்டப்படுவதற்கு முன்னரே முன் ஏலம் நடத்தி கடைகள் ஒப்படை செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது

எனவே தற்பொழுது புதிதாக கட்டப்படவுள்ள மீன் மட்டன் மற்றும் சிக்கன் இறைச்சிக் கடைகளுக்கு கீழ்க்குறிப்பட்டுள்ள நிபந்தனைகளின்படி முன் ஏலம் நடத்தலாம்.

1. ஏல வைப்புத் தொகையாக ரூ1 இலட்சம் செலுத்தி ஏலத்தில் கலந்து கொள்ளலாம்.

2. கடைகளுக்கு மாத வாடகை அடிப்படையில் ஏலம் கோரப்பட வேண்டும்.

3. உயா்ந்தபட்ச ஏலக்கோரிக்கை கோரியவா்கள் கடைகள் கட்டி முடிக்கப்பட்டு ஒதுக்கீடு செய்யப்படுவதற்கு முன்னா் ஒரு வருட வாடகை தொகையை முன் பணமாக செலுத்தப்பட வேண்டும்.

மேற்படி நிபந்தனைகளின் மற்றும் பொது நிபந்தனைகளின்படி ஏல வைப்புத் தொகையினை வசூல் செய்து கொண்டு முன் ஏலம் நடத்துவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு பொருள் சமா்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் ந.க. எண். 4466 / 2007 / அ10

<u>மாநகர மன்ற தீா்மான எண் 150 நாள் 25.09.07</u>

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீா்மானிக்கப்பட்டது.

(ஓம். ஆா். வெங்கடாசலம்)
மேயா்
கோயம்புத்தூா் மாநகராட்சி

---

<u>பொருள் எண். 15</u>

கோயம்புத்தூா் மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட உக்கடம் டி.எஸ்.வாா்டு எண்.3, பிளாக் நெம்பா் 25, டி.எஸ்.எண்.1905 பகுதியில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள கட்டமைப்பு வசதியுடன் கூடிய பழம் மற்றும் காய்கறி கடைகளுடன் கூடிய சந்தை ரூ130.00 லட்சங்களில் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

<u>கட்டமைப்பு விவரங்கள்</u>

| | |
|---|---|
| கடைகளின் எண்ணிக்கை மற்றும் அளவு | 68 எண்ணிக்கை |
| | ( I 56 எண்ணிக்கைகள் அளவு 10'0x10'0)<br>(II 12 எண்ணிக்கைகள் அளவு 11'0x10'0) |
| கழிப்பிடம் | 1 (அளவு 25'5" x 11'6" = 292.10 சதுரடி) |
| வாகன நிறுத்துமிடம் | 2 எண்ணிக்கை<br>(i) 1 அளவு 119'1'x 20'10'=2476.86 சதுரடி<br>(ii) அளவு 151'7" x 20'00"=3031.20 சதுரடி |

மாநகராட்சி நிா்வாக ஆணையா் அவா்களது சுற்றறிக்கையில் மாநகராட்சியில் இது போன்று கட்டப்படவுள்ள கடைகள் மற்றும் மாா்க்கெட்டுகள் கட்டி முடிக்கப்பட்டு பின்னா் ஏலம் விடப்படுவதால் கடைகள் ஒப்படைக்கும் காலம் வரையில் வருவாய் இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. இதனால் கடைகள் கட்டப்படுவதற்கு முன்னரே முன் ஏலம் நடத்தி கடைகள் ஒப்படை செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே தற்பொழுது புதிதாக கட்டப்படவுள்ள பழம் மற்றும் காய்கறி கடைகளுக்கு கீழ்க்குறிப்பட்டுள்ள நிபந்தனைகளின்படி முன் ஏலம் நடத்தலாம்.

1. ஏல வைப்புத் தொகையாக ரூ1 இலட்சம் செலுத்தி ஏலத்தில் கலந்து கொள்ளலாம்.

2. கடைகளுக்கு மாத வாடகை அடிப்படையில் ஏலம் கோரப்பட வேண்டும்.

3. உயா்ந்தபட்ச ஏலக்கோரிக்கை கோரியவா்கள் கடைகள் கட்டி முடிக்கப்பட்டு ஒதுக்கீடு செய்யப்படுவதற்கு முன்னா் ஒரு வருட வாடகை தொகையை முன் பணமாக செலுத்தப்பட வேண்டும்.

மேற்படி நிபந்தனைகளின் மற்றும் பொது நிபந்தனைகளின்படி ஏல வைப்புத் தொகையினை வசூல் செய்து கொண்டு முன் ஏலம் நடத்துவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு பொருள் சமா்ப்பிக்கப் படுகிறது.

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் ந.க. எண். 4466 / 2007 / அ10

<u>மாநகர மன்ற தீர்மான எண் 151 நாள் 25.09.07</u>

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஓம். ஆர். வெங்கடாசலம்)
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

பொருள் எண் 16

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள், சட்டமன்றத்தில் உள்ளாட்சித்துறை மான்ய கோரிக்கை 2007-2008, அறிவிப்பு எண் 22-ல் "உயர்கல்வி பயிலும் மாணவர்கள் குறிப்பாக வருமானம் குறைந்த குடும்பங்களைச் சார்ந்த மாணவர்கள் படிப்பதற்கு வசதியாக நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் மூலம் உயர்கல்வி படிப்பகங்கள் ஏற்படுத்தி, அவற்றில் பாட புத்தகங்கள் மற்றும் பாடசம்பந்தப்பட்ட நூல்கள், தேர்வுகள் சம்பந்தப்பட்ட துணை நூல்கள், விளக்கங்கள் அடங்கிய நூலகம் மற்றும் இணையதள வசதியுடன் கணிணிகள், படிப்பறை வசதிகள், விளக்கு, குடிநீர் மற்றும் கழிப்பிட வசதிகளுடன் கூடிய உயர்கல்வி படிப்பகம் " ஏற்படுத்த அறிவிப்பு செய்துள்ளார்.

எனவே அதனடிப்படையில், கோவை மாநகராட்சியில் தெற்கு மண்டலம், வார்டு எண் 27-க்குட்பட்ட டாக்டர் நஞ்சப்பா சாலையில், உயர்கல்வி பயிலும் மாணவர்களுக்காக நூலக அறை மற்றும் இணையதள வசதியுடன் கூடிய கணிணி அறை போன்ற வசதிகள் அடங்கிய மையம் அமைக்கும் பணிக்கு மதிப்பீடு ரூ25,00,000/- க்கு தொழில் நுட்ப அனுமதி பெறப்பட்டு நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு- அனுமதிக்கலாம். ந.க.எண் 12512/07/ எம்.டி 4

<u>மாநகர மன்ற தீர்மான எண் 152 நாள் 25.09.07</u>

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஓம். ஆர். வெங்கடாசலம்)
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

பொருள் எண் : 17

ஜவஹர்லால்நேரு தேசிய நகர்புற புனரமைப்புத் திட்டத்தின் கீழ் கோயம்புத்தூர் மாநகராட்சியில் ஒருங்கிணைந்த திடக்கழிவு மேலாண்மை திட்டத்தினை செயல்படுத்தும் பணிக்கு ரூ. 96.51 கோடி மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்ட விரிவான திட்ட அறிக்கையினிற்கு மத்திய நகர்புற மேம்பாட்டு அமைச்சகத்தின் "ஒப்புதல் வழங்குதல் மற்றும் கண்காணிப்பு குழு" கடந்த 02-02-2007-ல் ஒப்புதல் வழங்கியுள்ளது. மேற்படி திட்டத்திற்கு அரசாணை 160 (டி) ந.நி.மற்றும் குடிநீர் வழங்கல் துறை ( மா.ந. – II ) துறை நாள் 17-04-2007-ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி திட்டத்தில் இம்மாநகராட்சியால் செயல்படுத்தப்படவுள்ள முதற்கட்ட குப்பை சேகரிப்பு பணிகளை மேற்கொள்ளுவதற்கு தேவையான இரட்டை கண்டெய்னர்களை ஏற்றி செல்லக்கூடிய டம்பர் பிளேசர் வாகனங்கள் மற்றும் 2.5 கன.மீட்டர் கொள்ளளவு கொண்ட கண்டெய்னர்களை வாங்குவதற்கென ரூ. 1180.52 இலட்சம் (ரூ. 11.81 கோடி ) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கு முதலாவது அழைப்பாக கடந்த 07-09-2007 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரவழைக்கப்பட்டதில் கீழ்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன.

1) தி / ள் டாடா மோட்டார்ஸ் லிமிடெட், கோயம்புத்தூர்.

2) தி / ள் அசோக்லேலண்ட் லிமிடெட், சென்னை

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் தொழில் நுட்ப ரீதியாக தேர்ச்சி பெற்றதனை தொடர்ந்து ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு உறுப்பினர்களின் முன்னிலையில் 21-09-2007 அன்று விலைப்புள்ளிகள் திறக்கப்பட்டன. அதன் விபரம் பின்வருமாறு.

| | | | |
|---|---|---|---|
| 1) | தி/ ள் டாடா மோட்டார்ஸ் லிமிடெட், கோயம்புத்தூர். | : | ரூ. 11,58,87,900.00 (மதிப்பீட்டைகாட்டிலும் 1.60% அதிகம்) |
| 2) | தி / ள் அசோக்லேலண்ட் லிமிடெட், சென்னை | : | ரூ. 11,39,85,015.75 (மதிப்பீட்டைகாட்டிலும் 0.06% குறைவு) |

மேற்படி பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் தி / ள் அசோக்லேலண்ட் லிமிடெட், சென்னை நிறுவனத்தாரால் கொடுக்கப்பட்டுள்ள குறைவான ஒப்பந்தப்புள்ளி ரூ. 11,39,85,015.75 (மதிப்பீட்டைகாட்டிலும் 0.06% குறைவு) யினை ஏற்க பரிந்துரை செய்யலாமென ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக் குழு முடிவு செய்துள்ளது.

எனவே தி / ள் அசோக்லேலண்ட் லிமிடெட், சென்னை நிறுவனத்தாரால் கொடுக்கப்பட்டுள்ள குறைவான ஒப்பந்தப்புள்ளி ரூ.11,39,85,015.75 (மதிப்பீட்டைகாட்டிலும் 0.06% குறைவு) யினை ஏற்று அனுமதிக்க மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க.எண் : 12235 /2007/ எம்.டி.3

<u>மாநகர மன்ற தீர்மான எண் 153 நாள் 25.09.07</u>
அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஓம். ஆர். வெங்கடாசலம்)
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

பொருள் எண் 18

கோயம்புத்தூர் மாநகராட்சி, மேட்டுப்பாளையம் சாலையில் உள்ள மொத்த காய்கறி அங்காடி வளாகத்தில் உள்ள பழைய ஏ.சி கூரை வேயப்பட்ட 60 கடைகள் பழுதடைந்தும் காய்கறிகள் ஏற்றி இறக்கத் தேவையான வசதிகள் இல்லாமலும், காய்கறிகள் அழுகாமல் பாதுகாக்க வசதிகள் போதிய வசதிகள் இல்லாமல் உள்ளதாலும் மேற்படி வசதிகளுடன் கூடிய ஆர்.சி.சி கட்டிடம், குடோன் வசதியுடன் 60 புதிய கடைகள் கட்டுவதற்கு ஆகும் மதிப்பீடு ரூ.2.50 கோடிக்கு நிர்வாக அனுமதி அரசிடம் பெறலாம்.

மேலும் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களது சுற்றறிக்கையில் மாநகராட்சியில் இது போன்று கட்டப்படவுள்ள கடைகள் மற்றும் மார்க்கெட்டுகள் கட்டி முடிக்கப்பட்டு பின்னர் ஏலம் விடப்படுவதால் கடைகள் ஒப்படைக்கும் காலம் வரையில் வருவாய் இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. இதனால் கடைகள் கட்டப்படுவதற்கு முன்னரே முன் ஏலம் நடத்தி கடைகளை ஒப்படை செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. உத்தேசிக்கப்பட்டுள்ள கடைகளுக்கு கீழ குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளின்படி முன் ஏலம் நடத்தலாம்.

1. ஏல வைப்புத் தொகையாக ரூ. 5 லட்சம் செலுத்தி ஏலத்தில் கலந்துகொள்ளலாம்.
2. கடைகளுக்கு மாதவாடகை அடிப்படையில் ஏலம் கோரப்பட வேண்டும்.
3. உயர்ந்தபட்ச ஏலக்கோரிக்கை கோரியவர்கள் கடைகள் கட்டி முடிக்கப்பட்டு ஒதுக்கீடு செய்யப்படுவதற்கு முன்னர் ஒரு வருட வாடகை முன்பணமாக செலுத்தப்பட வேண்டும்.

மேற்படி நிபந்தனைகள் மற்றும் பொது நிபந்தனைகளின்படி ஏலவைப்புத் தொகை வசூல் செய்துகொண்டு முன் ஏலம் நடத்துவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண் 9209/2007/டி1 (மேற்கு)

<u>மாநகர மன்ற தீர்மான எண் 154 நாள் 25.09.07</u>

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஓம். ஆர். வெங்கடாசலம்)
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

பொருள் எண் 19

கோயம்புத்தூா் மாநகராட்சியில் கிராஸ்கட் சாலை மற்றும் ஆர்.எஸ்.புரம் பகுதிகளில் மிகவும் அதிகப்படியான தனியாா் வணிக வளாகங்கள் அமைந்துள்ளன. இப்பகுதிகளில் பொது மக்கள் வாகனங்கள் நிறுத்துமிடம் போதுமானதாக இல்லை. எனவே, பெருகிவரும் வாகன நெரிசல்களை சமாளிக்க காந்திபுரம் 8-ம் நெம்பர் மார்க்கெட் அருகே சீனிவாசபுரத்தில் உள்ள மாநகராட்சி காலி இடத்திலும், ஆர்.எஸ்.புரம் திவான் பகதூர் சாலையில் உள்ள மாநகராட்சி காலி இடத்திலும் திட்ட வடிவமைப்பு செய்தல், கட்டுதல், செயல்படுத்துதல் மற்றும் திருப்பி ஒப்படைப்பு செய்தல் (DBOT) என்ற முறையில் வணிக வளாகங்களுடன் அடுக்குமாடி வாகன நிறுத்துமிடங்கள் அமைக்க தகுதி வாய்ந்த நிறுவனங்களிடமிருந்து விருப்ப கேட்பு அறிக்கை (E.O.I) பெற மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு -அனுமதிக்கலாம். ந.க.எண் 41102/2006/எம்.டி. 6

<u>மாநகர மன்ற தீர்மான எண் 155 நாள் 25.09.07</u>

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒம். ஆர். வெங்கடாசலம்)
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

பொருள் எண். 20

கோயம்புத்தூா் மாநகராட்சி வடக்கு மண்டலம் சித்தாபுதூா் மேல் நிலைப்பள்ளியில் சுமாா் 60 லட்சம் ரூபாய் செலவில் அப்பள்ளியின் முன்னாள் மாணவா் சங்கத்தினால் சி.ஆா்.ஐ. அறக்கட்டளை உதவியுடன் நவீன தொழில்நுட்ப திறனுடன் கூடிய கலையரங்கம் கட்டப்பட்டுள்ளது. அந்த கலையரங்கத்தில் கணிணி மற்றும் ஷட்டில்காா்க் விளையாடுவதற்கான உள் விளையாட்டு அரங்கம் போன்றவை அமைக்கப்பட்டுள்ளன.

நவீன வசதிகளுடன் கூடிய மேற்கண்ட கலையரங்கத்தை பராமரித்து நிா்வகிக்கும் பொறுப்பை தங்களுக்கு வழங்கும்படி சித்தாபுதூா் மேல் நிலைப்பள்ளியின் முன்னாள் மாணவா் அமைப்பின் துணை தலைவா் தனது 11.09.2007-ந் தேதிய கடிதத்தில் கேட்டுள்ளாா். மேலும் நவீன தொழில் நுட்பங்களுடன் கூடிய அக்கலையரங்கத்தையும் கணிணி ஆய்வுக்கூடத்தில் புதிதாக 75 கணிணிகளை பொறுத்தி அதன் மூலம் 6-ம் வகுப்பு மாணவ-மாணவியருக்கு பயிற்சி அளிக்க கணிணி வகுப்புகளை தொடங்குவதாகவும் தெரிவித்துள்ளனா்.

கலையரங்கம் மற்றும் கணிணிகளை தற்போது மாநகாராட்சி பராமரித்தாலும் இனி ஏற்படுத்தப்போகும் தொழில்நுட்ப கணிணி பணிகளுக்கு பொறியியற் பிரிவில் பராமரிக்க போதுமான பணியாளா்கள் இல்லை.

சித்தாபுதூா் மேல்நிலைப் பள்ளியின் முன்னாள் மாணவா் அமைப்பிற்கு அனுமதி அளிக்கப்பட்டால் கலையரங்கம் மற்றும் கணிணி ஆய்வுக்கூடங்களை பராமரிக்கவும் மின் கட்டணம், பராமரிப்பு மற்றும் நிா்வாக செலவுகளை ஈடு செய்யவும் இயலும். முதலில் ஐந்து ஆண்டுகளுக்கு அனுமதி அளித்து அவா்களின் செயல்திறன் கண்டு மேலும் நீட்டிக்க இசைவு பெற்று நடவடிக்கை எடுக்கலாம்.

சித்தாபுதூா் மேல்நிலைப் பள்ளியின் முன்னாள் மாணவா் அமைப்பு, கலையரங்கம் மற்றும் கணிணி ஆய்வுக் கூடத்தை பராமரிக்க பயன்படுத்தப்படும் தன்மைகளுக்கு ஏற்ப கட்டணத்தை நிா்ணயம் செய்து கொள்ள அனுமதிக்கலாம்.

எனவே சித்தாபுதூா் மேல்நிலைப் பள்ளியில் கட்டப்பட்டுள்ள கலையரங்கத்தையும் கணிணி ஆய்வுக் கூடத்தையும் மின் கட்டணம், பராமரிப்பு மற்றும் நிா்வாக செலவுகளை ஏற்றுக் கொண்டும், பராமரிப்புக் கட்டணத்தை அவா்களே நிா்ணயித்துக் கொள்வதுமான நிபந்தனைகளுடன் சித்தாபுதூா் மாநகராட்சி மேல்நிலைப் பள்ளி முன்னாள் மாணவா் அமைப்பிற்கு அனுமதி வழங்க மாமன்ற ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-அனுமதிக்கலாம் ந.க. எண்.11683/2007/டி1 (வ)

<u>மாநகர மன்ற தீர்மான எண் 156 நாள் 25.09.07</u>

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது. பள்ளி மாணவர்களுக்கு இடையூறு ஏற்படாத வண்ணம் நிகழ்ச்சிகள் நடத்தப்படவேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

(ஒம். ஆர். வெங்கடாசலம்)
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

பொருள் எண். 21

கோயம்புத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட வ.உ.சி. பூங்கா, டாக்டர். நஞ்சப்பா ரோடு மைதானத்தில் 05.11.2007 முதல் 08.11.2007 வரை பட்டாசுக் கடைகள் வைக்க அனுமதி கோரியிருந்தனர். இம்மைதானத்தில் 17.10.2007 முதல் 07.11.2007 வரையில் கைவினைப் பொருட்கள் கண்காட்சி நடத்துவதற்கு அனுமதி கோரியிருந்ததால் மேற்படி பட்டாசுக் கடைகளுக்கு அனுமதி மறுக்கப்பட்டது.

இந்நிலையில் 17.10.2007 முதல் 07.11.2007 வரை கைவினைப் பொருட்கள் கண்காட்சி நடத்த அனுமதி கோரியிருந்த விண்ணப்பதாரர் மேற்படி கண்காட்சியினை 04.11.2007 உடன் முடித்துக் கொள்வதாக தெரிவித்து கடிதம் அளித்துள்ளார்.

இதனடிப்படையில் 06.11.2007 முதல் 08.11.2007 வரையில் பட்டாசுக் கடைகள் வைப்பதற்கு அனுமதி கோரி கீழ்க்குறிப்பிட்டுள்ள நபர்கள் மீண்டும் விண்ணப்பங்கள் அளித்துள்ளனர்.

| வ. எண். | பெயர் | தேவையான அளவு |
|---|---|---|
| 1. | ஏ.கணேசன் | 20' x 10' = 200 சதுரடி |
| 2. | ஆ.சந்திரசேகரன் | 20' x 10' = 200 சதுரடி |
| 3. | ஊ.பொன்னுதுரை | 20' x 10' = 200 சதுரடி |
| 4. | ஆ.நாகராஷ் | 20' x 10' = 200 சதுரடி |
| 5. | மு. சுப்ரமணியம் | 20' x 10' = 200 சதுரடி |

இம்மைதானத்தில் சென்ற வருடம் பட்டாசுக் கடைகள் வைப்பதற்கு மாமன்றத் தீர்மானத்தின்படி சதுரடி ஒன்றுக்கு ரூ.3/- நிர்ணயம் செய்து வைப்புத் தொகையாக ரூ.3000/- வசூல் செய்து கொண்டு அனுமதி வழங்கப்பட்டது.

இந்த வருடம் பட்டாசுக் கடைகள் வைப்பதற்கு சதுரடிக்கு ரூ.10/-ம் வைப்புத் தொகையாக ரூ.5,000/- நிர்ணயம் செய்யவும், மேற்படி கட்டணங்களை வசூல் செய்து கொண்டு பட்டாசுக் கடைகளுக்கு அனுமதி வழங்குவது தொடர்பாக மன்றத்தின் அனுமதிக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-அனுமதிக்கலாம் ந.க.எண். 6536/2007/அ10

<u>மாநகர மன்ற தீர்மான எண் 157 நாள் 25.09.07</u>

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒம். ஆர். வெங்கடாசலம்)
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் -22

பொருள் - கோவை மாநகராட்சி-வடக்கு மண்டலம்-வணிக வளாகம்-பட்டேல் ரோடு வணிக வளாகம்-உரிமக்காலம் 31.3.07ல் முடிவடைந்தது-உரிமக்காலம் நீட்டிப்பு செய்து- உரிமக் கட்டணம் உயர்வு செய்தல்-தொடர்பாக.

மாநகராட்சி வடக்கு மண்டலத்திற்குட்பட்ட பட்டேல் ரோடு மாநகராட்சி வணிக வளாகம் கடை எண்-2 முதல் 24 வரை (மொத்தம் 23 கடைகள்) மாமன்ற தீர்மான எண் -214 நாள் 22.07.04 ன்படி உரிமக்காலம் 31.03.2007 வரை நீட்டிப்பு செய்யப்பட்டது. நீட்டிப்பு காலம் 31.03.2007 உடன் முடிவடைகிறது.

நகர்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு சொந்தமான கடைகள், நிலங்கள் ஆகியவற்றை குத்தகைக்கு விடுதல் மூன்றாண்டுகளுக்கு மேலும் பொது ஏலத்தில் விடாமல் குத்தகை நீட்டித்தல் குறித்து அரசு ஆணை வெளியிட்டுள்ளது. அரசாணை எண்-147 நாள் 31.12.2000ன்படி மூன்றாண்டுகளுக்கு அளிக்கப்படும் குத்தகை புதிய குத்தகையாக கருதப்பட்டு புதியதாக குத்தகை நிர்ணயிக்கப்பட வேண்டும். இப்புதிய குத்தகைத் தொகை அப்பகுதியில் நடைமுறையில் உள்ள வாடகை மதிப்பின் அடிப்படையில் **(Market Rental Value)** நிர்ணயிக்கப்பட வேண்டும். அவ்வாறு நிர்ணயம் செய்ய அப்பகுதியில் மாநகராட்சியில் கடந்த ஓராண்டில் ஏலத்தில் விடப்பட்ட கடைகளின் வாடகை தொகை தனியார் கடைகளின் வாடகை அளவு , அரசு அல்லது அரசு சார்ந்த நிறுவனங்கள் தனியாரின் கட்டிடத்திற்கு அலுவலக வசதிக்கோ அல்லது பிற இனத்திற்கோ செலுத்தும் வாடகை மதிப்பின் அடிப்படையில் ஒரு சதுர அடிக்கான வாடகை நிர்ணயிக்கப்பட்டு அதன் அடிப்படையில் உள்ளாட்சி அமைப்புகளின் கடைக்கான புதிய குத்தகைத் தொகை நிர்ணயிக்கப்பட வேண்டும். எப்படியிருப்பினும் புதியதாக நிர்ணயிக்கப்படும் வாடகை தொகை சென்ற ஆண்டு வாடகையைவிட குறைந்தது 15% கூடுதலாக இருக்கவேண்டும் எனவும் மேற்படி அரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அரசாணையின்படி மேற்படி வணிகவளாகம் பகுதியில் கடந்த ஓராண்டில் புதியதாக மாநகராட்சிக்குச் சொந்தமான கடைகள் ஏலம் ஏதும் விடப்படவில்லை. பட்டேல் ரோடு வணிக வளாகம் கடைகளில் அதிகபட்சம் மாதவாடகை ரூ. 2144/- ம் குறைந்தபட்சமாக ரூ1419/- ம் வாடகை வசூல் செய்யப்படுகிறது. தனியார் கடைகளுக்கு அதிகபட்சமாக சதுர அடி ஒன்றுக்கு ரூ 10/-வசூல் செய்யப்பட்டு வருகிறது.

மேற்படி கடைகளின் தற்போதைய வாடகை, சந்தை மதிப்பின்படி நிர்ணயிக்கப்பட வேண்டிய வாடகை, குறைந்த பட்சம் 15/- உயர்வு செய்வதால் பெறும் வாடகை, தற்போது நிர்ணயம் செய்ய உள்ள வாடகை மற்றும் உயர்வு சதவீதம் பின்வருமாறு.

எனவே, 1.04.2007 முதல் 31.03.2010 வரை மூன்று ஆண்டுகளுக்கு கீழ்கண்டவாறு மாதவாடகை நிர்ணயம் செய்ய வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டது.

| கடை எண் | தற்போதைய வாடகை | சந்தை மதிப்பின்படி நிர்ணயிக்கப்பட வேண்டிய வாடகை | குறைந்தபட்சம் 15/- உயர்வு செய்வதால் பெறும் வாடகை | தற்போது நிர்ணயம் செய்யும் வாடகை தொகை | உயர்வு சதவீதம் |
|---|---|---|---|---|---|
| 2 | 1419 | 2200 | 1632 | 2200 | 55% |
| 3 | 1419 | 2200 | 1632 | 2200 | 55% |
| 4 | 1419 | 2200 | 1632 | 2200 | 55% |
| 5 | 1419 | 2200 | 1632 | 2200 | 55% |
| 6 | 1419 | 2200 | 1632 | 2200 | 55% |
| 7 | 1419 | 2200 | 1632 | 2200 | 55% |
| 8 | 1630 | 2200 | 1875 | 2200 | 35% |
| 9 | 1427 | 2200 | 1641 | 2200 | 54% |
| 10 | 1470 | 2200 | 1691 | 2200 | 50% |
| 11 | 1523 | 2200 | 1751 | 2200 | 45% |
| 12 | 1419 | 2200 | 1632 | 2200 | 55% |
| 13 | 1419 | 2200 | 1632 | 2200 | 55% |
| 14 | 1419 | 2200 | 1632 | 2200 | 55% |
| 15 | 1419 | 2200 | 1632 | 2200 | 55% |
| 16 | 1594 | 2200 | 1833 | 2200 | 38% |
| 17 | 1419 | 2200 | 1632 | 2200 | 55% |
| 18 | 1419 | 2200 | 1632 | 2200 | 55% |
| 19 | 1419 | 2200 | 1632 | 2200 | 55% |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **20** | **1419** | **2200** | **1632** | **2200** | **55%** |
| **21** | **1419** | **2200** | **1632** | **2200** | **55%** |
| **22** | **1419** | **2200** | **1632** | **2200** | **55%** |
| **23** | **1419** | **2200** | **1632** | **2200** | **55%** |
| **24** | **2144** | **2200** | **2466** | **2466** | **15%** |

**மேற்கண்டவாறு மாத வாடகை நிர்ணயம் செய்து 01.04.2007 முதல் 31.03.2010 வரையிலான மூன்று ஆண்டுகளுக்கு உரிமக்காலம் நீட்டிப்பு செய்து உத்திரவு வழங்க வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவுக்கு பொருள் வைக்கப்பட்டதில் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தனது தீர்மான எண்-33 நாள் 07.05.07 ல் ஒப்புதல் அளித்துள்ளது. இது தொடர்பாக மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.**

**அலுவலகக் குறிப்பு ஒப்புதல் அளிக்கலாம்.** **ந.க.எண் 4703/07/A4(N)**

**<u>மாநகர மன்ற தீர்மான எண் 158 நாள் 25.09.07</u>**

**வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் 07.05.07 ம் தேதிய தீர்மானம் எண்.33-ஐ ஏற்று அலுவலகக் குறிப்பு ஒப்புதல் அளிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.**

**(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்**
**மேயர்**
**கோயம்புத்தூர் மாநகராட்சி**

---

**(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்**
**மேயர்**
**கோயம்புத்தூர் மாநகராட்சி**